# பரலோகம் என்ற உண்மையான ஓர் இடம்

டிசம்பர் 25, 2000ல் என்னுடைய அம்மா, இயேசு இருக்கும் நித்திய வீட்டிற்கு சென்றார். என்னுடைய அம்மா இந்தப் பூமியில் வாழ்ந்த கடைசி நிமிடங்களில், நானும், என் அப்பாவும், அக்காவும் மற்றும் சிலரும் அவருக்கு அருகில் உட்கார்ந்து இருந்தோம். அப்பொழுது, அவர் தன்னுடைய முழுபெலத்தையும் கொடுத்து, மூச்சு விட்டுக்கொண்டு இருந்தார். அது மாலை சுமார் 4:30 மணியிருக்கும், அணையப்போகும் ஒரு மெழுகுவர்த்தி, கொஞ்சம் கொஞ்சமாக மங்குவதுபோல, அவர் மூச்சுவிடுதலும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டு இருந்தது. புற்று நோய் அவருடைய நுரையீரலை முற்றிலும் அரித்திருந்தபடியால், மருத்துவர்களால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. இப்புவி வாழ்வின் அவருடைய கடைசி நிமிடங்களில், அவருடைய கரத்தை நான் பிடித்துக்கொண்டு, ஆவியில் நிறைந்து ஜெபம் செய்தேன். அப்பொழுது, ''*நானே உயிர்த்தெலுதலும், ஜீவனுமாய் இருக்கிறேன்*'' என்று, நம் வாழ்வை ஆளும் இயேசு சொன்ன வார்த்தைகள், என் வாயிலிருந்து திடீரென வந்தது. அந்த வசனத்தில் உள்ள மீதமுள்ள வசனங்கள் எனக்குத் தெரிந்திருந்தபோதிலும், அப்பொழுது அவைகளை எல்லாம் தியானிக்கும் மனது எனக்கு இல்லை. என்னுடைய அம்மா இறந்துகொண்டிருக்கிறார் என்ற உண்மையையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, ''இயேசுவே, நானே உயிர்த்தெலுதலும், ஜீவனுமாய் இருக்கிறேன்'' என்று சொன்னீரே, என்று அதையே திரும்பத் திரும்பச் சொல்லி ஜெபித்துக்கொண்டு இருந்தேன். ஏனெனில், என்னுடைய அம்மா எப்படியும் அதிசயமாக உயிர்பிழைப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஆனால், ஒருசில வினாடிகளிலேயே அவருடைய உயிர், அவருடைய உடலில் இருந்து பிரிந்துவிட்டது. எங்கள் கண்களில் கண்ணீர் வடிய, எங்கள் குரல்கள் மங்கியதாக, ''இயேசுவே ஆண்டவர்! இயேசுவே ஆண்டவர்! மரணத்தினின்று உயிர்த்தெழுந்தார்! இயேசுவே ஆண்டவர்!'' என்று பாடினோம்.

பின்பு வந்த நாட்களில், மரணம், மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்க்கை பற்றிய அனேக வேத வசனங்களை வாசித்தேன். மரணம், பரலோகம் குறித்த வேத சத்தியங்களை விசுவாசிக்க நான் தீர்மானித்தேன். அந்த வசனங்களை நான் தியானிக்க தியானிக்க எனக்குப் பெலனும், ஆறுதலும், சமாதானமும், தைரியமும், நம்பிக்கையும் கிடைத்தது. அவைகளில் சிலவற்றை இந்த புத்தகம் மூலம் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நாம் அனைவருமே, இன்று இல்லையென்றாலும், ஒரு

நாளில் நம்முடைய அன்பானவர்கள் மரணத்தைச் சந்திப்பதை நிச்சயம் கண்கூடாகப் பார்ப்போம். அப்பொழுது, எங்களை ஆறுதல்படுத்திய இந்த வசனங்கள் உங்களையும் ஆறுதல்படுத்த வேண்டும் என்ற ஜெபத்துடன், இவைகளை எழுதுகிறேன்.

மனிதர்கள் அனைவரும் ஒருநாள் மரிப்பது நிச்சயம். ஆகவேதான், ''*அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே*'' (எபிரேயர் 9:27) என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, மனிதன் ஒரு முறை பிறந்து, இறந்து, மறுஜென்மத்தில் மீண்டும் பிறந்து, அவர் முற்பிறவியில் ஏற்பட்ட குற்றங்குறைகளைச் சரிசெய்துகொள்ளும் வாய்ப்பு இல்லை என்பதை இந்த வேதவசனம் உறுதிப்படுத்துகிறது. 1 தெசலோனிக்கேயர் 4:17-ன் படி, இயேசு மீண்டும் இந்தப் பூமிக்கு வரும்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள் தவிர, மற்றவர்கள் அனைவரும் இந்தப் பூமியில் வாழ்ந்து, ஒருநாள் மரணத்தைச் சந்தித்து, காலங்களுக்கு அப்பாற்பட்ட நித்தியமான உலகிற்குள் பிரவேசிப்பது நிச்சயம்.

ஏனெனில், மனிதர்களாகிய நாம் அனைவரும் காலங்களுக்கு அப்பாற்பட்டு நித்தியமாக வாழும்படி படைக்கப்பட்டவர்கள். ஆகவே, நம்முடைய உடல் என்பது, காலங்களுக்கு அப்பாற்பட்டு வாழும் நம்முடைய ஆவி, மற்றும் ஆத்துமா, ஆகியவை தற்காலிகமாகக் குடியிருக்கும் ஒரு குடியிருப்பாகும். யாக்கோபு 2:26-ம் வசனத்தின்படி, நாம் மரணத்தைச் சந்திக்கும்பொழுது, காலங்களுக்கு அப்பாற்பட்டு வாழும் நம்முடைய ஆவி, ஆத்துமா, தன்னுடைய தற்காலிக குடியிருப்பாகிய உடலிலிருந்து வெளியேறுகிறது. அவ்வாறு வெளியேறும் ஒருவருடைய ஆவி, ஆத்துமா, பரலோகத்திலோ, அல்லது நரகத்திலோ நித்திய நித்தியமாக வாழ்கிறது.

## இந்த வாழ்க்கைக்கு பின் உள்ள வாழ்க்கை

**யோவான் 11:25,26**

**25 இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;**
**26 உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்.**

வேதாகம சத்தியங்களை நம்புகிற நாம் அனைவருமே, மரணம் ஒருவருடைய வாழ்க்கையின் முடிவு இல்லை என்பதில் உறுதியாக இருக்கிறோம். இயேசுவை நம்பி வாழ்ந்து மரித்தவர்கள், உயிரோடுதான் வாழ்கிறார்கள். கிறிஸ்துவை நம்பி வாழ்ந்து மரித்தவர்களுடைய ஆவி, ஆத்துமா, பரலோகத்தில் உள்ள இயேசுவோடு போய்ச்சேர்ந்து, அங்கே வாழ்கிறார்கள். மரித்தவருடைய உடலில், உயிரில்லாமல் இருக்கலாம்,

**அறியேன்.**
**[23] ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;**
**[24] அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.**

மேலுள்ள வசனத்தின் அடிப்படையில், இயேசுவை விசுவாசித்து வாழ்கிற நமக்கு மரணம் என்பது, இலாபமாகவும் இந்த உடலிலிருந்து நம் ஆவி, ஆத்துமா பிரிந்து, நாம் கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கை, நல்ல வாழ்க்கையுமாக இருக்கிறது. ஆகவே, கிறிஸ்தவர்களுக்கு மரணம் தோல்வியும் அல்ல; துக்கத்துக்குரியதும் அல்ல. மரணம் என்பது இந்த உலக வாழ்க்கையைவிட நல்ல ஒரு வாழ்க்கைக்குள் நுழையும் வாயிலாகும். நாம் இந்த உலகில் சிறப்பாக வாழ்ந்த காலகட்டத்தைவிட, மிகவும் சிறப்பான ஒரு வாழ்க்கைக்குள் போவதே மரணம் ஆகும். மரித்த நமக்கு அன்பானவர்கள், இந்த உலகத்தில் அனுபவித்த சிறப்புக்களைவிடவும், மேலான ஒரு வாழ்க்கையை அங்கு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஆம், அவர்கள் இறந்தபின்பு, குடும்பத்தில் ஒரு வெற்றிடம் தோன்றுவது உண்மைதான். அவர்களோடு நாம் செலவழித்த நேரங்கள், ஐக்கியங்கள், உறவுகளை நாம் இழப்பதும் உண்மைதான். ஆனால், அந்த வேதனை, ஏக்கங்களை அவர்கள் அங்கே அனுபவிப்பதில்லை; மாறாக நாம்தான் இங்கு அனுபவிக்கிறோம். அவ்வாறு மரணத்தால் நாம் இழந்த அவர்களோ, அங்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்து இருக்கிற இடத்தில் இருக்கிறார்கள். இந்த உண்மைகளை நாம் தியானித்து வாழும்பொழுது, அவர்களை இழந்த துக்கங்களோடு துக்கத்தோடு நாம் வாழாமல், மரணத்தின் மூலம் சம்பாதித்த இலாபமான வாழ்க்கையையும், அவர்கள் வாழ்கிற சந்தோசமான வாழ்க்கையையும் நினைத்து, நாமும் சந்தோசமாக வாழலாம்.

## பரலோகம் ஒரு அற்புதமான இடம்

**யோவான் 14:1,2**
**[1] உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.**
**[2] என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.**

**யோவான் 17:24**
**பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும்**

**என்னுடனேகூட இருக்கவிரும்புகிறேன்.**

இயேசுவை நம்பி வாழ்கிற நம்மில் பெரும்பான்மையானவர்கள், அவரை பார்த்திருக்கவும் மாட்டோம், அவர் சத்தத்தைக் கேட்டிருக்கவும் மாட்டோம். அவருடைய பிரசன்னத்தை உணர்ந்திருப்போம், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்களை அனுபவித்து இருப்போம். காலங்களுக்கு அப்பாற்பட்டு வாழப்போகிற வாழ்க்கையின் சிறப்புக்களை அவருடைய வார்த்தையின் மூலம் ருசிபார்த்து இருப்போம் (எபிரேயர் 6:5). இருந்தபோதிலும், கிறிஸ்துவை விசுவாசித்து மரிக்கிறவர்கள், மரித்த அடுத்த நொடியே, இயேசு இருக்கிற இடத்தில், அவரோடு சேர்ந்து வாழ ஆரம்பிக்கிறார்கள். அவர் இருக்கிற இடத்தில், அவரோடு அவர்கள் சேர்ந்து வாழ்கிறபடியால், அவர் உலகத்தில் இருக்கிற, அவருடைய சிறப்பை எல்லாம் பார்க்க ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்காக இயேசு ஆயத்தம் செய்த இடத்தில் அவர்கள் வசிக்க ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்கு வெள்ளை உடை உடுத்தப்படுகிறது (வெளிப்படுத்துதல் 3:5). அரியணையில் அமர்ந்திருக்கும் அவரை, அந்த உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் ஆராதிப்பதைக் காண்கிறார்கள்; *காலங்களுக்கு அப்பாற்பட்டு வாழும் அவர் பெயரையும், புகழையும் சொல்லி அவரைத் துதிக்கிறார்கள்.* (வெளிப்படுத்துதல் 4:9). முடிவே இல்லாத இந்த ஆராதனையில், இவர்களும் இணைந்துகொள்கிறார்கள். இவ்வாறாக, இயேசுவை நம்பி வாழ்ந்து, நமக்கும் முன்பாக மரித்த லட்சக்கணக்கான மக்களை, இவர்கள் அங்கு சந்திக்கிறார்கள். இவ்வாறாக, அந்த உலகில் நடக்கும் காரியங்களில் நாம் சிலவற்றைத் தெரிந்திருக்கிறோம்; மேலும், அனேக சிறப்புக்களை நாம் இன்னும் தெரியாமலும் இருக்கிறோம். ஆகவே, இயேசுவை நம்பி வாழ்ந்து மரித்த, நமக்கு அன்பானவர்கள், அற்புதமானதோர் இடத்தில் இயேசுவோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

## இந்த வார்த்தைகளினாலே ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லுங்கள்

**1 தெசலோனிக்கேயர் 4:16-18**
**16 ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதானதூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.**
**17 பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.**
**18 ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.**

மரணம், பரலோகம், உயிரோடு எழுதல், இந்த புவி வாழ்க்கையைத்

தாண்டிய வேறொரு வாழ்க்கை பற்றிய இவைகளில், நமக்கு நம்பிக்கை ஏற்படுவதர்காகவே கடவுள் இந்த காரியங்களையெல்லாம் வெளிப்படுத்தி, வேதத்தில் எழுத வைத்து இருக்கிறார். கடவுளுடைய வார்த்தையில் சொல்லப்பட்ட இந்த சத்தியங்களை நாம் நம்பி, எதிர்பார்த்து வாழ்ந்தால், இந்த வசனங்களை ஒருவருக்கு ஒருவர் சொல்லி, ஆறுதல் படுத்தலாம். இந்த வேத வசனங்கள் மூலம், ஆறுதல் அடைந்து, பெலன் அடைந்து, புத்துணர்வு பெற்றால்தான், *அவருடைய வேலைகளை* நாம் தொடர்ந்து இந்தப் பூமியில் செய்யமுடியும் (1கொரிந்தியர் 15:58). ஆனால், கடவுளுடைய இந்த வார்த்தைகளை நாம் நம்பி, அதின்படி செயல்படாமல் வாழ்ந்தால், அவைகளின் மூலம் கிடைக்கும் ஆறுதலை நம்மால் அனுபவிக்க முடியாது. நம் நினைவுகள், நம்பிக்கை மற்றும் நம் நடத்தைகள் அனைத்தும் வேத வசனத்தின் போதனைக்கு ஒத்திருக்க வேண்டும்.

ஆனால் நம்மில் சிலர், இவ்வாறான வசனங்கள் மூலம் கிடைக்கும் ஆறுதலைவிட, மற்ற மனிதர்கள், அவர்கள் துக்கத்தைச் சொல்லி, அவர்களிடம் காட்டும் பரிதாபத்தை எதிர்பார்க்கிறார்கள். துக்க நாட்களில், மக்கள் அவர்கள் மீது கவனம் செலுத்துவதையும், தொங்கிய முகங்களோடு சொல்லும் வணக்கங்களையும் (துக்க விசாரணைகளையும்) அனுபவிக்க ஆசைப்படுகிறார்கள். ஆனால், துக்க தினத்தன்று காட்டுகிற இதுபோன்ற பரிதாப உணர்வுகளை, தொடர்ந்துவரும் நாட்களில் அவர்களால் அனுபவிக்க முடியாது என்பதை மறந்துபோகிறார்கள். அவ்வாறாக, உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மூலமாக அனுபவிக்கும் பரிதாபங்கள், அதின்மூலம் கிடைக்கும் ஆறுதல்கள், தொடர்ந்து கிடைக்காத பட்சத்தில், என்னுடைய துக்கங்களை ஒருவருமே புரிந்துகொள்வதில்லை; என்னை யாருமே கண்டுகொள்வதில்லை என்று மற்றவர்கள் மீது குறைகூறத் துவங்குவார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், நம்முடைய துக்கங்களுக்கு கடவுள் வார்த்தையிலிருந்து கிடைக்கும் ஆறுதல்களை அனுவிக்கத் தவறி, உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மூலம் கிடைக்கும் ஆறுதல்களை எதிர்பார்த்து, அது கிடைக்காமல், மேலும் மேலும் துக்கங்களைக் கூட்டிக்கொள்கிறோம். நமக்கு அன்பானவர்களை இழந்து, துக்கத்தில் இருப்பவர்கள் இவ்வித குறைகளைத் தங்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டும். மேலும், அவைகளைக் குறித்த கடவுள் வார்த்தைகளைத் தியானித்து, அவரிடமிருந்தும், அவருடைய வார்த்தையிலிருந்தும் பெலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## பதில் கிடைக்காத கேள்விகள்

பெரும்பாலும், இதுபோன்ற நேரங்களில், நமக்குள் பல கேள்விகள் எழலாம்; அவற்றிற்கு பதில் கிடைக்காமலும் போகலாம். இவர் ஏன் இவ்வளவு இளம் வயதில் மரித்துப் போனார்? வியாதிப்பட்டு, விபத்தில் அல்லது வேறு ஒரு பேரிடரில் ஏன் மரிக்க நேரிட்டது? ஆண்டவரது வல்லமையால்

முடித்துவிட்டுச் சென்று இருக்கிறார்கள். விளையாட்டு அரங்கில் உட்கார்ந்து, ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிறவர்களை கவனித்துக்கொண்டு இருப்பது போலவே, நாம் இந்த உலகில் கடவுளுக்காக வாழ்கிற வாழ்க்கையை அவர்கள் இப்பொழுது மேல் உலகில் இருந்து கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, கடவுள் நமக்கென்று இந்த உலகில நியமித்திருக்கிற ஓட்டத்தை குறிக்கோளாக வைத்து, தடைகளைப் பொறுமையோடு சகித்து வாழவேண்டும். கடவுளைப் பிரியப்படுத்தி வாழ நம்மால் முடிந்த எல்லா முயற்சிகளையும் நாம் எடுக்க வேண்டும். இறந்து போன, நமக்கு அன்பானவர்களின் இழப்பை நினைத்து தொடர்ந்து துக்கத்தோடேயே வாழ்ந்துகொண்டு இருக்கக்கூடாது. அவர்களுக்கு விடைகொடுத்த ஒரு சில நாட்களிலேயே, நம்மை எதற்காகக் கடவுள் அழைத்தாரோ, அவைகளை நிறைவேற்றும் எண்ணத்தோடு வாழ ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில், இயேசுவை நம்பி வாழ்ந்து நமக்கு முன்பாக அவரிடம் போய்ச்சேர்ந்தவர்களோடு, நாமும் ஒருநாள் சேர்ந்து நின்று, நாம் இந்த பூமியில் அவருக்காக செய்தவைகளுக்குரிய பரிசுப்பொருளைப் பெறப்போகிறோம். ஆகவே, நமக்கு முன்பாக இயேசுவிடம் போனவர்கள், நாம் இந்த பூமியில் இருந்தபொழுது ஆண்டவரின் அழைப்புக்கு உண்மையாக வாழ்ந்தோம் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளும்படி வாழ்வோம்.

